## Interview (Aptitude Test)

The applicants will be called for an interview. The members of the Board will assesses the talents and aptitude of the candidates, based on which the selection will be made.

All certificates in Original should be produced at the time of Interview.

Selected candidates will have to pay the fees on or before the specified date. Fees once paid will not be refunded.

Admission is subject to verification of marks and certificates by the Director of Government Examinations and if any certificate is found to be bogus, admission is liable for cancellation besides criminal action being taken.

## Original Certificates to be submitted at the time of admission

1. X[th] Certificate for I.B.A
2. +2 Certificate for B.A
3. Degree Certifiate for M.A.
4. Income Certificate
5. Transfer Certificate
6. Conduct Certificate
7. Statement of Marks
8. Attendance Certificate
9. Community Certificate from Thasildar (only in case of SC/ST/XSC/MBC and BC candidates)
10. Passport size photos 12 nos

Applicants must take sufficient number of attested copies of their S.S.L.C. and Higher Secondary mark sheets, before submitting the originals at the College Office. The above originals will not be returned to the students during the course.

## Hostel Facilities

Separate hostel facilities are available for boys and girls.

Rs.2500/- per month for boarding and lodging

Caution deposit Rs.2500/-per annum (refundable). Other miscellaneous expenses are extra.

## Scholarship and Fee Concessions

Fee concessions to SC/ST/Christian converts from SC/ST will be awarded under rule 92 M.E.R. Scholarship will be awarded to eligible students as per Govt. rule in force. The necessary forms of applications for scholarship can be obtained from the college office. No scholarship application will be accepted after 31st August.

The students will get a Stipend of Rs.500/- every month that is given by the Department of Art & Culture.

As per the Higher Education Assurance Scheme of Tamil Nadu Government, the students who studied from 6th Std to 12th Std in the Government Schools will get Rs.1000 every month.

## General

75% of attendance at classes is a prerequisite for taking the Semester Examination.

A student must pass both continuous Internal Assesment and semester examination in all the papers

Application forms for admission will be issued from 15[th] May.

Last Date to receive filled in application :

Within one week after publication of 10[th], +2 and degree results.

This college does not accept Capitation Fee or Donation for admission




**Kalai Kaviri College of Fine Arts**

9, Benwells Road, Cantonment, Tiruchirappalli 620 001, India.

Tel : 0431 2460678, Fax : 0431 2411345

E-mail : kalaikaviri@kkcfa.ac.in

Web : www.kalaikavirifinearts.in



*St.Joseph's Institute of Printing, 2411788*


# KALAI KAVIRI COLLEGE OF FINE ARTS

9, Benwells Road, Tiruchirappalli - 620 001. India

(An Aided & Minority College)

Nationally Re-Accredited With **'A' grade (III Cycle)** by NAAC

**(Affiliated to the Tamil Nadu Dr. J. Jayalalithaa Music and Fine Arts University)**

# PROSPECTUS



## ABOUT THE COLLEGE

Kalai Kaviri College of Fine Arts, born of its parent institution Kalai Kaviri, belongs to the Catholic diocese of Tiruchirappalli, Tamil Nadu. It was inaugurated in August 1996 affiliated to the Bharathidasan University, Tiruchirappalli. It is now affiliated to the Tamil Nadu Dr. J. Jayalalithaa Music & Fine Arts University, Chennai from the year 2014. Kalai Kaviri has a professional background imparting systematic training in Bharatanatyam and South Indian Classical Music.

The College aims at preserving, promoting and popularizing these cultural treasures of our land among people of all creeds and communities and to train the younger generation in the divine arts of Dance and Music in order to inculcate self-discipline and build up spiritual strength in them.

On completion of their training, the students become full-fledged professionals with creative and leadership qualities and they become eligible for appointment as approved teachers in Fine Arts in Educational Institutions or to run their own institutions for Dance and Music.

As a sign of appreciation and recognition of the pioneering services of Kalai Kaviri College of Fine Arts, the Government of Tamil Nadu has upgraded it as a Government Aided College, from August 2000. Also, the Government has acclaimed the College as the Best Cultural Institution in Tamil Nadu, for the year 2000.

It is a pride and proud that this College was awarded A Grade by the NAAC in its first , second & third cycles in 2007, 2013 & 2019 respectively.





## COURSES OFFERED

### I. Bachelor of Arts (B.A.) in Bharatanatyam and Music.

Eligibility : +2

Duration : 3 Years

Medium of Instruction : Tamil and English

This course follows semester system

Part I Language : Tamil, Sanskrit
Part II English
Part III Major Discipline
B.A. Bharatanatyam
B.A. South Indian Classical Music
Vocal, Violin, Veena, Mridangam.

### II. Integrated Degree Course (I.B.A) in Bharatanatyam and Music

Eligibility:S.S.L.C (X Std.)

Duration : 5 Years

Medium of Instruction : Tamil and English

Part I Language : Tamil, Sanskrit
Part II English
Part III Major Discipline
B.A. Bharatanatyam
B.A. South Indian Classical Music
Vocal, Violin, Veena, Mirudangam

### III. Master of Arts (M.A.) Semester Pattern In Bharatanatyam and South Indian Classical Music-

Vocal, Violin, Veena, Mirudangam.

Medium of Instruction : Tamil and English.

Eligibility : B.P.A or B.F.A or B.A. Degree in Music or Bharatanatyam

Duration : 2 years





### IV. M.Phil in South Indian Classical Music-

Vocal,Violin,Veena,Mridangam.

### V. Doctor of Philosophy (Ph.D. Programme) in Bharatanatyam and Music

The Department of Bharatanatyam and Music offer Ph.D., Programmes (Full-Time & Part-Time) recognized by the Tamil Nadu Dr. J. Jayalalithaa Music and Fine Arts, University, Chennai. This is the first college in the Southern Region that offers Ph.D. Programme in Bharatanatyam.

Candidates who possess Master's Degree with not less than 55% of marks are eligible to apply for Full-time (three years) / Part-time (four years) Ph,D. There shall be four sessions of registration, in January, April, July and October.

### Opportunities to enrich the students' Talents

- oppertunity to be a performer in reputed dance
- chance to participate in troupe of Kalai Kaviri College of Fine Arts
- Teaching practice
- Practice in Choreography and Nattuvangam (for Bharatanatyam Students)
- Practice in conducting Classical Music
- Orchestra (for Music Students)



## நேர்முகத் தேர்வு

இக்கல்லூரியில் விண்ணபித்தவர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும்போது நடுவர் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு அதனடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நேர்முகத் தேர்வின்போது அனைத்து அசல் சான்றிதழ்களையும் (**Original Certificates**) கொண்டு வரவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் குறிப்பிட்ட தேதியில் கட்டணத்தொகையை செலுத்த வேண்டும். மேலும் இம்மாணவர்கள் கல்லூரியிலிருந்து வெளியேற விரும்பினால் ஒருமுறை செலுத்திய கட்டணத்தொகையை மீண்டும் பெற இயலாது.

அரசு தேர்வாணையாளரால் வழங்கப்படும் அசல் சான்றிதழ்களில் (Original Certificates) ஏதாவது போலி ஆவணங்கள் இருப்பது கண்டுப்பிடிக்கப்பட்டால் சேர்க்கையிலிருந்து (Admission) நீக்கப்பட்டு சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்லூரியில் சேரும் போது கீழ்க்கண்டவாறு அசல் சான்றிதழ்கள் (Original Certificates) சமர்ப்பிக்க வேண்டும்.

1. பத்தாம் வகுப்புச் சான்றிதழ் - IBA சேர்க்கைக்கு
2. +2 சான்றிதழ் - BA சேர்க்கைக்கு
3. பட்டப்படிப்பு சான்றிதழ் - MA சேர்க்கைக்கு
4. வருமானச் சான்றிதழ்
5. மாற்றுச் சான்றிதழ்
6. நன்மதிப்புச் சான்றிதழ்
7. மதிப்பெண் பட்டியல்
8. வருகைச் சான்றிதழ்
9. சாதிச் சான்றிதழ் (SC, ST, BC, MBC, XSC)
10. புகைப்படம் சிறியது - 12 (Passport Size)

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கான அசல் சான்றிதழ்களை கல்லூரியில் சமர்ப்பிக்கும் முன்பே அரசு பதிவு பெற்ற அதிகாரியின் கையொப்பம் இடப்பட்ட நகலை (Xerox) எடுத்து வைத்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில் நீங்கள் இக்கல்லூரியில் படித்து முடிக்கும் வரை இவற்றை திரும்ப பெற இயலாது.

## விடுதி வசதி

மாணவ, மாணவிகளுக்கென தனித்தனியே விடுதி வசதி உண்டு.

1. தங்குமிடம் மற்றும் உணவுக் கட்டணம் மாதம் ரூ. 2500
2. முன்பணம் - ரூ. 2,500/- (இப்பணம் படிப்பு முடியும் போது மீண்டும் வழங்கப்படும்).

இளங்கலை பட்டப் படிப்புக்கு அரசு ஆணையின்படி கல்விக் கட்டணம் கிடையாது.

## உதவித்தொகை மற்றும் கல்விக் கட்டணச் சலுகைகள்

92 M.E.R. முறைப்படி தமிழக அரசால் அமல்படுத்தப்பட்டுள்ள சட்டத்தின் அடிப்படையில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், (SC, ST, BC, MBC) மற்றும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த BC, SC, ST பிரிவினர்க்கும் அரசு உதவித்தொகை பெற்றுத்தரப்படும். இந்த உதவித் தொகைக்கான விண்ணப்பப் படிவம் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஆகஸ்ட் 31-ஆம் தேதிக்கு பிறகு இப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

இங்கு பயிலும் அனைத்து மாணவர்க்கும் கலை பண்பாட்டுத் துறையின் சிறப்பு கல்வி உதவித்தொகை (Stipent) மாதம் ரூபாய் 500 பெற்றுத் தரப்படும்.

தமிழ்நாடு அரசின் உயர்கல்வி உறுதித் திட்டத்தின்படி 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் பயின்றோர்க்கு மாதம் ரூபாய் 1000 பெற்றுத் தரப்படும்.

## பொதுவானவை

75% வருகை நாள்கள் இருந்தால்தான் மாணவர் பல்கலைக்கழக பருவத்தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

பருவத் தேர்வில் ஒவ்வொரு தாளிற்கும் குறைந்தபட்ச அக மதிப்பெண் இருக்கும். இதில் தேர்ச்சி பெற்றால்தான் தேர்வில் வெற்றி பெற முடியும்.

விண்ணப்பப் படிவங்கள் மேமாதம் 15-ஆம் தேதி முதல் வழங்கப்படும். SC, ST மாணவர்களுக்கு விண்ணப்பக் கட்டணம் கிடையாது. (சாதி சான்றிதழ் கொண்டு வர வேண்டும்.)

விண்ணப்பங்களை நேரில் பெற இயலாதோர் இணையம் மூலம் பதிவிறக்கம் செய்து அனுப்பி வைக்கலாம். இதற்கான விண்ணப்பக் கட்டணத்தை நேர் முகத் தேர்வில் செலுத்த வேண்டும்.

10, 12-ஆம் வகுப்பு மற்றும் பட்டப்படிப்பு தேர்வு முடிவுகள் வெளியான ஒரு வாரத்திற்குள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் வந்து சேர வேண்டும்.

எக்காரணம் கொண்டும் இக்கல்லூரியானது முதலீட்டுத் தொகை மற்றும் அன்பளிப்புத் தொகையை சேர்க்கைக்காக பெற்றுக் கொள்ளாது.


**கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி**

9, பென்வெல்ஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி - 620 001.

தமிழ்நாடு, தென்இந்தியா

போன் : (0431) 2460678, 2411073

பேக்ஸ் : 91-431-2411345

வலைதளம் : kalaikaviri@kkcfa.ac.in

இணையதளம் : www.kalaikavirifinearts.in



*St.Joseph's Institute of Printing, 2411788*


# கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி

9, பென்வெல்ஸ் சாலை, திருச்சிராப்பள்ளி - 620 001.

(An Aided & Minority College)

Nationally Re-Accredited with **'A' grade (III Cycle)** by NAAC

**(Affiliated to the Tamil Nadu Dr. J. Jayalalithaa Music and Fine Arts University)**



# PROSPECTUS



## வரலாற்று சுவடுகள் :

திருச்சி மறை மாவட்டத்தின் கலைத்தொடர்பு நிலையமாக 1977-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் உருவாக்கப்பட்ட கலைக்காவிரி நிறுவனத்தின் பல்வகையான கலைப் பணிகளின் விளைவாக தமிழக அரசின் அங்கீகாரத்துடன் உருவாக்கப்பட்டதே கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி.

தமிழக அரசின் அங்கீகாரத்தையும், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவையும் பெற்று 1996-ஆம் ஆண்டு மொன்சிஞோர் S.M. ஜார்ஜ் அடிகளாரால் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி நிறுவப்பட்டது.

நம் நாட்டின் பாரம்பரிய சிறப்புமிகு செவ்வியல் கலைகளான பரதநாட்டியம், குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம் ஆகியவற்றிற்கு இளங்கலை, முதுகலை, இசை ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டங்களை ஒரே வளாகத்தில் வழங்கும் தமிழகத்தின் முதல் நுண்கலைக் கல்லூரியாக இக்கல்லூரி கலைப்பணிபுரிந்து வருகிறது. 18.08.2000 அன்று தமிழக அரசின் நிதி உதவி பெறுகின்ற கல்லூரியாக உயர்வு கண்டது. இதே ஆண்டில் தமிழக அரசின் சிறந்த கலை நிறுவன விருதையும், 2007-ஆம் ஆண்டில் தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் "A" தகுதி மற்றும் தமிழக அரசின் சிறுபான்மைக் கல்லூரி எனும் தகுதியையும் பெற்று செயலாற்றி வருகிறது.

2013 & 2019 ஆம் ஆண்டுகளில் தேசிய தர மதிப்பீட்டு ஆய்வுக் குழுவின் இரண்டு மற்றும் மூன்றாம் வருகையில் 'A' grade தரநிலை பெற்றுள்ளது.

2014ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் புதிதாக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தின் இணைவு பெற்ற கல்லூரியாக மாற்றம் பெற்றுள்ளது.

தொன்மைசிறப்புமிக்க பரத, இசைக்கலைகளை அதன் புனிதம் சிதையாது பாதுகாத்து வளர்ப்பதோடு சாதி, சமய, இன, மொழி பேதமின்றி அனைத்து மக்களுக்கும் இக்கலைகளை கொண்டு சேர்க்கும் சேவையே இக்கல்லூரியின் மிக முக்கிய இலட்சியப் பணியாகும்.

தெய்வீகச் சிறப்புமிக்க நம் மண்ணின் செவ்வியல் கலைகளை இளைய தலைமுறைக்கு பயிற்றுவித்து, இதன் வழியாக மாணவர்களை சுய ஒழுக்கத்தில் மேம்படச் செய்வதும், இவர்களின் வழியாக கலைகளை வளர்த்திடச் செய்வதும், நல்ல கலை நிகழ்வுகளின் வழியாக மனித நேயம், மதநல்லிணக்கம், மனித மதிப்பீட்டுச் சிந்தனைகளை நிலைபெறச் செய்வதும் இக்கல்லூரியின் பணிக் கோட்பாடுகளாகும்.

கலை வளர மனிதம் மலர என்கிற இலட்சியக் கொள்கையின் வழியில் செயல்பட்டு வரும் இக்கல்லூரியில் பயிற்சி முடித்து செல்கின்ற மாணவர்கள் கற்ற கலையில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாகவும் படைப்பாற்றல் திறன் மிக்கவர்களாகவும், நல்லொழுக்கம் மற்றும் தலைமைப் பண்புடையோராகவும் முழுமை பெறுகின்றனர். மேலும் அங்கீகரிக்கப்பட்ட நுண்கலை ஆசிரியர்களாகவும், சுயமாக கலைப்பணி தொடங்குகின்ற தகுதிக்குரியோராகவும் பிற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆற்றல் மிகுந்தவர்களாகவும் கலைப்பணி புரியத் தொடங்குகின்றனர்.

## படிப்புகளின் விபரம்

### 01. இளங்கலைப் பட்டப்படிப்பு (BA in Bharatanatyam & Music)

| | | |
|---|---|---|
| தகுதி | - | +2 தேர்ச்சி |
| பயிற்று மொழி | - | தமிழ், ஆங்கிலம் |
| காலம் | - | 3 ஆண்டுகள் |

பல்கலைக்கழக பருவத்தேர்வு (Semester) முறையில் வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| பகுதி I | - | மொழிப்பாடம் - தமிழ், சமஸ்கிருதம் |
| பகுதி II | - | மொழிப்பாடம் - ஆங்கிலம் |
| பகுதி III மற்றும் | - | முதன்மைப்பாடம் (Major) பரதநாட்டியம் இசை (குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம்) |
| பகுதி IV | - | துணைமைப் பாடம் (Allied) (குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம்) |

### 02. ஒருங்கிணைந்த இளங்கலைப் பட்டப்படிப்பு (IBA in Bharathanatyam and Music)

| | | |
|---|---|---|
| தகுதி | - | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி |
| பயிற்று மொழி | - | தமிழ், ஆங்கிலம் |
| காலம் | - | 5 ஆண்டுகள் |

பல்கலைக்கழக பருவத்தேர்வு (Semester) முறையில் வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| பகுதி I | - | மொழிப்பாடம் - தமிழ், சமஸ்கிருதம் |
| பகுதி II | - | மொழிப்பாடம் - ஆங்கிலம் |
| பகுதி III மற்றும் | - | முதன்மைப்பாடம் (Major) பரதநாட்டியம் இசை (குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம்) |
| பகுதி IV | - | துணைமைப் பாடம் (Allied) (குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம்) |

### 03. முதுகலைப் பட்டப்படிப்பு (MA in Bharathanatyam & Music)

| | | |
|---|---|---|
| தகுதி | - | 3 ஆண்டுகள் BFA, BPA, BA அல்லது 5 ஆண்டுகள் IBFA பட்டம் பெற்றவர்கள் |
| பயிற்றுமொழி | - | தமிழ், ஆங்கிலம் |
| காலம் | - | 2 ஆண்டுகள் |

பல்கலைக்கழக பருவத்தேர்வு (Semester) முறையில் வழங்கப்படுகின்றன.

முதன்மைப்பாடம் (Major) பரதநாட்டியம் மற்றும் இசை (குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம்)

### 04. ஆய்வியல் நிறைஞர் பட்ட மேற்படிப்பு (M.Phil.in Music)

| | | |
|---|---|---|
| தகுதி | - | MFA, MA பட்டம் பெற்றவர்கள் |
| பயிற்றுமொழி | - | தமிழ், ஆங்கிலம் |
| காலம் | - | 1 ஆண்டு |

### 5. ஆராய்ச்சிப்பட்ட மேற்படிப்பு (Ph.D.in Bharathanatyam and Music)

தகுதி - முதுகலைப் படிப்பில் 55 விழுக்காடு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றவர்கள்தான் இதில் விண்ணப்பிக்க தகுதி படைத்தவர்கள்.

இக்கல்லூரியில் இசை, நாட்டியத்திற்கான முழுநேர மற்றும் பகுதிநேர ஆராய்ச்சிப்படிப்பு தமிழ்நாடு டாக்டர் ஜே.ஜே. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே முதன்முதலில் தென் மண்டலத்தில் நடனத்திற்கான முனைவர் பட்டம் வழங்கக்கூடிய ஒரே கல்லூரியாகத் திகழ்கிறது.

| | | |
|---|---|---|
| முழுநேர படிப்பு | - | 3 ஆண்டுகள் |
| பகுதி நேர படிப்பு | - | 4 ஆண்டுகள் |

வருடத்திற்கு நான்கு முறை சேர்க்கைக்கான பதிவு நடைபெறுகிறது. (ஜூலை, அக்டோபர், ஜனவரி, ஏப்ரல்)

எதிர்கால திட்டத்திற்கு இசை மற்றும் பரதநாட்டியத்துறை மாணவர்களின் திறமைகளை செழுமையாக்கும் விதம் கீழ்க்கண்டவாறு வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன.

1. மேடை நிகழ்வுகளை வழங்குவதற்கான பயிற்சி
2. கற்பிக்கும் முறை பற்றிய பயிற்சி (Teaching Practice)
3. நடன அமைப்பு, நட்டுவாங்கத்தில் தனிப்பயிற்சி (நடனம்)
4. செவ்வியல் குழு இசையை (Music Orchestra) தாமே நடத்துவதற்கான பயிற்சி.

